

NSW கல்வித் திணைக்களம்

# NSW அரச பாடசாலை ஒன்றில் Year 7-க்கு மாறுதல்

## உங்கள் குழந்தை Year 6 -இருந்து Year 7 - இற்கு மாறுவதைத் தொடங்க இணையத்தில் விண்ணப்பிக்கவும்.

### உங்களுடைய பிள்ளையின் உள்ளூர்ப் பாடசாலை

பாடசாலை வயதிலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் – அவர்களுடைய உள்ளூர்ப் பாடசாலையில் படிப்பதற்கான தகுதி பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெரும்பான்மையான NSW அரச பாடசாலைகளுக்கென 'ஒதுக்கப்பட்ட உள்-வாங்குப் பகுதிகள்' உள்ளன.

உங்களுடைய பிள்ளையின் உள்ளூர்ப் பாடசாலை எது என்பதை உங்களுடைய பிள்ளையின் நிரந்தர வசிப்பிட விலாசம் தீர்மானிக்கும். உள்ளூர்ப் பாடசாலை எது என்பதைக் கண்டறிவதில் education.nsw.gov.au/school-finder எனும் வலைத்தலத்திலுள்ள The School Finder (பாடசாலைக் கண்டறிவி)எனும் சாதனத்தினால் உங்களுக்கு உதவ இயலும்.

NSW மாநிலத்திலுள்ள பெரும்பான்மையான பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் தமது பிள்ளைகளுக்குச் சிறந்ததொரு கல்வியை அளிப்பதற்குத் தமது உள்ளூர்ப் பாடாசாலைகளைத் தெரிவு செய்கின்றனர். திணைக்களத்தின் இணையவழி சேர்க்கை முறைமை உயர்நிலைப் பாடசாலைக்கு மாறுவதற்கு ஆதரவுதவியளிக்கிறது.

அதியுயர் திறன் வாய்ந்த மற்றும் இயற்கையான ஆற்றல்கள் மிக்க மாணவ-மாணவியருக்கும், கூடுதல் கல்வி மற்றும் ஆதரவுதவித் தேவைகள் உள்ள மாணவ-மாணவியருக்கான கல்வித் திட்டங்கள் உள்ளடங்க, அனைத்துத் திறன் மட்டங்களிலும் உள்ள மாணவ-மாணவியருக்கான கல்விச் சேவைகளை உள்ளூர்ப் பாடசாலைகள் அளிக்கின்றன.

ஒன்றிற்கும் மேற்பட்ட வெவ்வேறு வளாகங்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் உள்ளன, இப்படிப்பட்ட ஒவ்வொரு வளாகமும் வெவ்வேறு வகையான கல்வியில் சிறப்புத்துவம் கொண்டவையாக இருக்கும். உதாரணமாக, 'இள-நிலை வளாகங்கள்' (Years 7-9 அல்லது 7-10), 'முது-நிலை வளாகங்கள்' (Years 10-12 அல்லது 11-12), 'தேர்வு-நிலைக் கல்வி வளாகங்கள், கலவன் கல்வி வளாகங்கள் மற்றும் ஓர்-இனக் கல்வி வளாகங்கள் ஆகியன.

Kindergarten -இல் இருந்து Year 12 வரைக்கும் ஒரே பாடசாலைச் சூழலில் தமது பிள்ளைகளுக்குக் கல்வி அளிப்பதற்கான வாய்ப்பினைப் பல கிராமிய மற்றும் தொலைதூர சமூகத்தினருக்கு அளிக்கும் 'மையப் பாடசாலைக'ளும் உள்ளன. மாணவ-மாணவியருக்குப் பலவகைப்பட்ட பாடங்களை அளிப்பதற்கு ஏது செய்யும் வகையில், ஆசிரியர்களையும் மாணவ-மாணவியரையும் தொடர்புபடுத்துவதற்காகப் பல 'மையப் பாடசாலைகள்' நவீனத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றன. பரந்த வீச்சிலான 'மேலதிகப்-பாடத்திட்ட நடவடிக்கைகளையும் 'மையப் பாடசாலைகள்' அளிக்கின்றன.

உங்களால் இணையவழி விண்ணப்பிக்க முடியாவிட்டால் அல்லது அவ்வாறு செய்ய விரும்பாவிட்டால், இந்தக் கையேட்டின் பக்கம் 5ல் உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்யவும். பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை உங்கள் குழந்தையின் ஆரம்பப் பாடசாலைக்கு திருப்பி அனுப்பவும்.

மேலதிகத் தகவல்கள் பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கும்:
education.nsw.gov.au/public-schools/going-to-a-public-school/enrolment/high-school-enrolment

NSW GOVERNMENT

# மற்ற பாடசாலைத் தெரிவுகள்

## உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலை அல்லாத வேறொரு பாடசாலைக்கு உங்களுடைய பிள்ளை செல்லவேண்டுமென நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள் உங்களுக்கு இருக்கக்கூடும்.



### 'உள்ளூர் சாரா (அல்லது உள்ளூர்ப்-பகுதிக்கு அப்பாற்பட்ட) பாடசாலைகள்'

ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் உள்ள நிரந்தரமான இட வசதிகளை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பாடசாலையில் சேர்க்கப்பட இயலுமான மாணவ-மாணவியரது எண்ணிக்கையை நிர்ணயிக்கும் 'உயர்-மட்ட அளவு' ஒன்றை 'ஒதுக்கப்பட்ட உள்-வாங்குப் பகுதிகள்' உள்ள பாடசாலைகள் கொண்டிருக்கும். உள்ளூரைச் சாராத மாணவ-மாணவியர்களைச் சேர்க்கலாமா இல்லையா என்பது இந்த 'உயர்-மட்ட அள'வைப் பொறுத்து அமையும். கல்வி ஆண்டு நடந்துகொண்டிருக்கும் இடைப்பட்ட காலத்தில் பாடசாலையில் சேர்வதற்காக வரும் உள்ளூர் மாணவ-மாணவியர்களுக்கென முன்னெச்சரிக்கையாக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மட்டத்தினையும் சில பாடசாலைகள் இந்த 'உயர்-மட்ட அளவு'க்குள்ளாகக் கொண்டிருக்கும்.

அசாதாரணமான சூழ்நிலைகள் இருந்தாலொழிய, தமது 'உயர்-மட்ட அள'வினை எஞ்சிவிட்ட, அல்லது 'உயர்-மட்ட அள'வினைத் தொடும் நிலையிலுள்ள பாடசாலைகள் உள்ளூர் சாரா மாணவ-மாணவியர்களைச் சேர்த்துக்கொள்ளாது.

இருப்பினும், முன்னெச்சரிக்கையாக ஒதுக்கப்பட்டுள்ள மட்டத்திற்குக் கீழாக இடங்கள் உள்ள பாடசாலைகள் உள்ளூர் சாரா மாணவ-மாணவியர்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடும்.

முன்னெச்சரிக்கையாக ஒதுக்கப்பட்டுள்ள மட்டத்திற்குக் கீழாகக் கிடைக்கும் இடங்களின் எண்ணிக்கையைத் தாண்டும் அளவில் உள்ளூர் சாரா சேர்க்கைகளுக்கான கேட்பு இருக்கும்போது, பாடசாலை எல்லைக்கு அப்பாற்பட்ட மாணவ-மாணவியரது சேர்க்கைக்கான தகுதித் தேவைகளைப் பாடசாலைகள் உருவாக்கிக்கொள்ள வேண்டும், மற்றும் உள்ளூர் சாரா விண்ணப்பங்களைக் கருத்தில் கொள்வதற்காக 'தேர்வுக் குழு' ஒன்றை நிறுவவேண்டும்.

### சிறப்புத்துவப் பாடசாலைகள்

குறிப்பிட்ட ஒரு திறன் அல்லது ஆர்வத்தின் மீது கவனக்குவிவு செய்யும் இரண்டாம் நிலைக் கல்வி(secondary education)யை சிறப்புத்துவப் பாடசாலகள் அளிக்கின்றன. ஆக்கக் கலை (creative), செயல்வினைக் கலை (performing) மற்றும் காட்சிக் கலைகள் (visual arts, மொழிகள், தொழில்நுட்பம் (கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் கிராமியத் தொழில்நுட்பம் உள்ளடங்க), வேளாண்மை மற்றும் விளையாட்டு ஆகியவற்றிற்கான சிறப்புத்துவப் பாடசாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

செயல்திறன் சோதனையும், குரல்வளச் சோதனையும் சில சிறப்புத்துவப் பாடசாலைகளில் சேர்க்கைக்கான தகுதித் தேவைகளில் உள்ளடங்கலாம்.

### ஆதரவுதவி வகுப்புகள்

உடலியலாமையுடைய மாணவர்களுக்குத் தேவைப்படும் கல்வி சம்பந்தப்பட்ட கூடுதல் ஆதரவுதவிகளுக்கு வகை செய்யும் வகுப்புகள் சில இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் உள்ளன. உங்கள் பிள்ளைக்கேற்ற சரியான பாடசாலையைத் தெரிவு செய்வதில் உங்களுடைய விருப்பம், உங்கள் பிள்ளைக்குத் தேவைப்படும் குறிப்பிட்ட கூடுதல் கல்வி ஆதரவுதவிகள் மற்றும் உள்ளூர் சிறப்புத்துவ சேவைகளின் அருகாமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உங்கள் பிள்ளையின் ஆரம்பப் பாடசாலை அதிபர் உதவுவார்.

இட அமர்த்தல் செயல்பாட்டு முறை ஒன்றின் மூலமாக ஆதரவுதவி வகுப்பு ஒன்றில் சேர்க்கப்படுவது கருத்தில் கொள்ளப்படும்.

### கல்விசார் தெரிவுப் பாடசாலைகள்

மாணவர் Year 5 -இல் இருக்கும்போது முழு அல்லது பகுதி கல்விசார் தெரிவுப் பாடசாலை ஒன்றில் சேர்வதற்கான விண்ணப்ப செயல்முறை துவங்கும், மற்றும் இது சாதாரணமான பாடசாலைச் சேர்க்கைச் செயல்முறையை விட நீண்டதாக இருக்கும்.

இந்த விண்ணப்பப் படிவம் இணையத்தில் மட்டுமே கிடைக்கும். காலம் கடந்த விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைத் தயவு செய்து கவனிக்கவும்.

பின் வரும் வலைத்தளப் பக்கத்தில் கல்விசார் தெரிவுப் பாடசாலைகளின் அட்டவணை ஒன்றும் அவற்றிற்கான சேர்க்கைச் செயல்முறைகளைப் பற்றியுமான தகவல்களும் உள்ளன: https://education.nsw.gov.au/public-schools/selective-high-schools-and-opportunity-classes

### தீவிர ஆங்கிலக் கல்வி மையங்கள்

தீவிர ஆங்கிலப் பயிற்சி உதவிகள் கிடைக்கும் உயர்நிலைப் பாடசாலைகள் உள்ள இடங்களைத் தெரிந்துகொள்ள https://education.nsw.gov.au/school-finder எனும் வலைத்தளத்திலுள்ள 'School Finder' எனும் சாதனத்தினைப் பாவியுங்கள்.

உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலை வரைபடத்தைத் தேட உங்களுடைய வீட்டு விலாசம் அல்லது அஞ்சல் குறியீட்டு இலக்கத்தினைக் கொடுத்து "Nearby schools" என்பதில் Intensive English Centre எனும் பொத்தானைத் தெரிவு செய்யுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு, தயவு செய்து உங்களது உங்களது உள்ளூர் ஆரம்பப் பாடசாலை அதிபருடன் அல்லது நீங்கள் தெரிவு செய்யும் இரண்டாம்நிலைப் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களது விசாரிப்பில் மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால் 131 450 -இல் **"தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை"**யினை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். இச்சேவை உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கும்.

# ஆர்வ வெளிப்பாட்டினைப் பூர்த்தி செய்தல்

## உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலை மற்றும்/அல்லது அதிகபட்சமாக 3 உள்ளூர் சாரா பாடசாலைகளுக்கான 'ஆர்வ வெளிப்பாட்டுப் படிவ'த்தினைப் பூர்த்தி செய்வதன் மூலம் உங்கள் பிள்ளை எந்த பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் சுட்டிக் காண்பிக்கலாம்.

Year 7 - இல் உங்களுடைய பிள்ளையை சேர்ப்பதில் மூன்று படிநிலைகள் உள்ளன:

### படி நிலை 1: நீங்கள் தெரிவு செய்யும் அரச பாடசாலையில்/பாடசாலைகளில் இடம் வேண்டுவதற்காக 'ஆர்வ வெளிப்பாட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

**அடுத்த ஆண்டு NSW அரச பாடசாலை ஒன்றில் Year 7 -இல் இடம் வேண்டுமென விரும்பும் அனைத்து மாணவர்களது பெற்றோர்களாலும் கவனிப்பாளர்களாலும் இந்தப் படிவம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.**

NSW அரசு ஆரம்பப் பாடசாலைகளில் தற்போது சேர்ந்துள்ள மாணவர்கள், உங்கள் ஆர்வ வெளிப்பாட்டை இணையத்தில் பூர்த்தி செய்யலாம் அல்லது இணைக்கப்பட்ட காகிதப் படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் குழந்தையின் ஆரம்பப் பாடசாலைக்கு திருப்பி அனுப்பலாம். NSW அரசு தொடக்கப் பாடசாலையில் தற்போது சேராத மாணவர்கள், உங்கள் ஆர்வ வெளிப்பாட்டை இணையத்தில் பூர்த்தி செய்யலாம் அல்லது இந்தப் படிவத்தை உங்கள் குழந்தையை நீங்கள் சேர்க்க விரும்பும் NSW அரசு மேல்நிலைப் பாடசாலைக்கு திருப்பி அனுப்பலாம்.

**அனைத்து ஆர்வ வெளிப்பாடுகளும் உரிய தேதியில் அல்லது அதற்கு முன் கட்டாயம் திருப்பி அனுப்பப்பட வேண்டும்.**

### படிநிலை 2: பாடசாலையில் சேர்வதற்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யுங்கள்

ஒரு பாடசாலையில் உங்களுடைய பிள்ளைக்கு இடம் அளிக்கப்படவுடன், **NSW அரச பாடசாலை ஒன்றில் சேர்வதற்கான விண்ணப்பம்** எனும் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். 'பருவம் 2' அல்லது 'பருவம் 3'- இல் இது உங்களுக்கு அனுப்பப்படும்.

விண்ணபத்தை இணையத்தில் பூர்த்தி செய்யலாம் அல்லது தவணை 2 அல்லது தவணை 3-இன் போது உங்களுக்கு அனுப்பப்படும் காகித படிவத்தை பூர்த்தி செய்யலாம்.

இந்தப் படிவத்தில் காணப்படும் அனைத்து விபரங்களையும் தயவு செய்து பூர்த்தி செய்து கூடிய விரைவில் இதைத் திருப்பியனுப்புங்கள்.

பாடசாலை அதிபரால் உங்களது விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்பட்டு ஏற்றுகொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலைச் சேர்க்கையின் மீதான இறுதி முடிவு மேற்கொள்ளப்படும். மேலதிகத் தகவல்கள் நாடி அதிபர் உங்களுடன் தொடர்புகொள்ளக்கூடும்.

பாடசாலைச் சேர்க்கைக்காக உங்கள் பிள்ளை ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் அல்லது மின்னஞ்சல் ஒன்றை நீங்கள் பெறுவீர்கள்.

### படிநிலை 3: உங்களுடைய புதிய பாடசாலையைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்

உங்களுடைய பிள்ளையின் பாடசாலைச் சேர்க்கையைப் பற்றிய உறுதி கிடைத்ததும், Year 7-க்கு உங்களுடைய பிள்ளை மாற ஆதரவுதவியாக இருக்கும் வகையில் இப்புதிய பாடசாலையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

வகுப்பு மாறலுக்கான நடவடிக்கைகளையும் அடுத்துவரும் ஆண்டில் Year 7 இல் படிப்பைத் துவங்கும் மாணவர்களுக்கான அறிமுக நாள் ஒன்றையும் பாடசாலை ஒழுங்கு செய்யும். வழக்கமாக நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசம்பர் மாதம் ஆரம்பத்தில் நடக்கும் இந்த நாளன்று பொதுவாகப் பெற்றொர்களும் கவனிப்பாளர்களும் அழைக்கப்படுவர். இரண்டாம் நிலைப் பாடசாலைப் பாடங்கள், ஆசிரியர்கள், வகுப்பறைகள் மற்றும் பாடசாலைச் செயல்முறைகள் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்கள் பிள்ளைக்கு இது உதவும், மற்றும் சக மாணவர்களைச் சந்திக்க இது அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கும்.

சீருடைகள், பயணத் தெரிவுகள் மற்றும் இதர முக்கிய விபரங்களைப் பற்றிய தகவல்களோடு சேர்த்து அறிமுக நாள் எப்போது இடம் பெறும் என்பதைப் பற்றி உங்களது புதிய பாடசாலை உங்களுக்கு அறியத்தரும்.

மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால் தயவு செய்து பாடசாலை அதிபரை அழையுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவு செய்து 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யை **131 450** -இல் அழைத்து மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவ தொலைபேசி இயக்குனர் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இச்சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.

## உங்கள் பிள்ளைக்குப் படிப்பில் ஆதரவுதவியாக இருக்க உங்களுடைய புதிய பாடசாலைக்கு உதவும் தகவல்கள்

படிப்பில் உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்படும் ஆதரவுதவிகளைப் பற்றிய தகவல்களை உங்களது புதிய பாடசாலைக்கு நீங்கள் கொடுக்கவேண்டியது முக்கியம். உங்களது பிள்ளைக்கு இருக்கும் ஒவ்வாமைகள் அல்லது மற்ற மருத்துவ நிலைகள் சம்பந்தப்பட்ட தகவல்களை உங்களுடைய பாடசாலைக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டியது இன்றியமையாதது.

'ஆனஃபிலாக்ஸிஸ்' எனப்படும் ஒவ்வாமை, ஆஸ்த்துமா, சர்க்கரை நோய் அல்லது வலிப்பு ஆகியன, ஆனால் இவை மட்டுமல்ல, உங்களுடைய பிள்ளைக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய தகவல்கள் இதில் உள்ளடங்கும்.

உங்களுடைய பிள்ளைக்கு 'ஆனஃபிலாக்ஸிஸ்' ஒவ்வாமை இருப்பது கண்டறியப்பட்டிருந்தால், உங்களுடைய பிள்ளையின் மருத்துவரால் பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட, தற்போது நடப்பிலுள்ள ASCIA Action Plan for Anaphylaxis - ஐ உங்களுடைய பிள்ளையின் புதிய பாடசாலைக்குத் தாருங்கள்.

இத்திட்டத்தில் விளக்கிச் சொல்லப்பட்டுள்ள அவசரகால சிகிச்சைக்கு உதவியாக இருக்கும் வகையில், ASCIA Action Plan மட்டுமின்றி ஒருவரால் தானாகவே போட்டுக்கொள்ள இயலும் 'அட்ரீனலின் ஆட்டோஇஞ்செக்டர்' எனும் ஊசியும் பாடசாலைக்குத் தேவைப்படும். பாடசாலைக்கு நீங்கள் கொடுக்கும் 'அட்ரீனலின் ஆட்டோஇஞ்செக்டர்' ஊசி மீது காணப்படும் காலாவதித் திகதியைக் குறித்துவைத்துக் கொண்டு, அந்தத் திகதிக்கு முன்பாகவே மாற்று ஊசி ஒன்றைப் பாடசாலைக்குத் தாருங்கள்.

## ஆர்வ வெளிப்பாட்டை ப் பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவும் தகவல்

### 'பகுதி - A'

தயவு செய்து உங்களுடைய பிள்ளையைப் பற்றிய தகவல்களைப் பூர்த்தி செய்து **'பகுதி - A'**-யில் உள்ள உறுதிமொழியில் கையொப்பமிடுங்கள்.

## 'பகுதி - B'

உங்களுடைய பிள்ளையின் வீட்டு விலாசத்தின் அடிப்படையில், உங்களுடைய பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலையின் பெயரை **'பகுதி - B'**காண்பிக்கிறது. உங்களுடைய பிள்ளைக்கு அதனுடைய உள்ளூர்ப் பாடசாலையில் ஒரு இடத்திற்கான உரிமம் உள்ளது.

உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலையில் நீங்கள் இடம் நாடினால் மட்டுமே, தயவு செய்து **'பகுதி - B'**-யில் கையொப்பமிட்டு உரிய திகதிக்குள் படிவத்தைத் திருப்பியனுப்புங்கள். படிவத்தினை நீங்கள் இப்போது நிரப்பி முடித்துவிட்டீர்கள்.

தெரிவு நிலைக் கல்விப் பாடசாலைக்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால், மற்றும் அந்த விண்ணப்பம் வெற்றியடையாவிட்டால் உங்களுடைய பிள்ளை உள்ளூர்ப் பாடசாலைக்குச் செல்லவேண்டுமென நீங்கள் விரும்பினாலும், **'பகுதி - B'**-யில் கையொப்பமிட்டுத் திகதியைக் குறிப்பிடுங்கள்.

## 'பகுதி - C'

வேறு பாடசாலைகளில் நீங்கள் இடம் நாடினால், உங்களது விருப்ப வரிசைப் பிரகாரம் மூன்று பாடசாலைகள் வரைக்கும் **'பகுதி - C'**-யில் அட்டவணைப்படுத்துங்கள்.

கீழ்வரும் பாடசாலைகளில் நீங்கள் இடம் நாடலாம்:

- சிறப்புத்துவப் பாடசாலை
- ஆதரவுதவி வகுப்பு (உங்களுடைய ஆரம்பப் பாடசாலை அதிபருடனான ஆலோசனைக்குப் பிறகு, அவரே நீங்கள் நாடும் ஆதரவுதவி வகுப்பிற்கான உங்களுடைய விண்ணப்பத்தை சமர்ப்பிப்பார்)
- நீங்கள் வசிக்கும் பகுதிக்கு வெளியே உள்ள பாடசாலை.

**சிறப்புத்துவப் பாடசாலைகள், மற்றும் உள்ளூர் சாராத பாடசாலைகளில் இடம் ஒதுக்கும் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கூடுதல் விண்ணப்பத் தேவைப்பாடுகள் இருக்கும் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.**

கூடுதல் படிவங்கள் எதையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டுமா என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், தயவு செய்து நீங்கள் ஆர்வம் காட்டும் பாடசாலையுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

**நீங்கள் வசிக்கும் பகுதியை சாராத பாடசாலை ஒன்றில் நீங்கள் இடம் நாடினால்,கூடுதல் படிநிலை ஒன்று உள்ளது.**

**சேர்க்கைக்கான ஒதுக்கீட்டிற்கு கீழே உள்ள இடங்களின் எண்ணிக்கையை விட உள்ளூர் பகுதி சாராத சேர்க்கைத் தேவை அதிகமாக இருக்கும் தருணத்தில், உள்ளூர் பகுதியை சாராத பாடசாலை சேர்க்கைகளுக்கான அளவுகோல்களைப் பாடசாலைகள் கொண்டுள்ளன.**

நீங்கள் வசிக்கும் பகுதியை  சாராத பாடசாலை ஒன்றில் நீங்கள் இடம் நாடினால், உள்ளூர் சாராத பாடசாலையில் நீங்கள் இடம் நாடுவதற்கான காரனங்களைத் தாருங்கள், உதாரணமாக:

- அந்தப் பாடசாலையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டிருக்கும் சகோதர, சகோதரிகள்
- பாடசாலையின் அருகாமை அல்லது அதைச் சென்றடையும் வசதி
- ஓர் பால் பாடசாலையைச் சென்றடையும் வசதி
- மருத்துவக் காரணங்கள்
- பாடசாலை நேரத்திற்கு முன்னரும் பின்னரும் உங்கள் பிள்ளைக்கான பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை
- குறிப்பிட்ட பாடசாலையில் பாடங்கள் அல்லது பாடங்களின் கலவைகள் கிடைத்தல்
- கருணை அடிப்படையிலான சூழ்நிலைகள்
- பாடசாலையின் கட்டமைப்பு மற்றும் அமைப்புமுறை
- உள்ளூர் சேர்க்கைக்கான எல்லைக்கோடுகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமீப மாற்றங்கள்

இந்தப் படிவத்திலுள்ள தகவல்கள் மற்றும் நீங்கள் கொடுக்கும் தகுந்த ஆவணங்கள் ஆகியவற்றை மட்டுமே பாடசாலையின் மாணவர் சேர்க்கைக் குழு கருத்தில் கொள்ளும்.

உங்களுடைய 'தெரிவு 1' பாடசாலையில் உங்களுடைய பிள்ளைக்கு இடம் அளிக்கப்படவில்லை என்றால், உங்களுடைய 'தெரிவு 2' பாடசாலையில் ஒரு இடத்திற்காக உங்களுடைய பிள்ளை கருத்தில் கொள்ளப்படும், மற்றும் பொருந்திவரும் தருணங்களில் 'தெரிவு 3' -இற்காக உங்களுடைய பிள்ளை கருத்தில் கொள்ளப்படும்.

உங்கள் விருப்பது தெரிவுப் பாடசாலை எதிலும் உங்களுக்கு இடம் கிடைக்காமல் போனால், பாடசாலை அதை உங்களுக்கு அறியத்தரும். நீங்கள் காத்திருப்புப் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றும், இடம் ஒன்று கிடைக்கும்போது அது உங்களுக்கு அளிக்கப்படும் என்றும் பாடசாலை உங்களுக்குக் தெரிவிக்கலாம்.

நீங்கள் அட்டவணையிட்டுள்ள பாடசாலைத் தெரிவுகள் ஒன்றில் உங்கள் பிள்ளைக்கு இடம் கிடைத்துவிட்டால், உங்கள் விருப்பத் தெரிவிற்கு கீழுள்ள எந்தவொரு பாடசாலையிலிருந்தும் இட அளிப்பு எதையும் நீங்கள் பெறமாட்டீர்கள்.

நீங்கள் வேண்டிய பாடசாலைகள் எதிலும் இடம் இல்லை என்றால், **'பகுதி - B'**-யில் சொல்லப்பட்டுள்ள உள்ளூர்ப்பாடசாலையில், பாடசாலைச் சேர்க்கைக்கான உங்களுடைய விண்ணப்பம் அந்தப் பாடசாலையினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், உங்கள் பிள்ளைக்கான இட அமர்வு கிடைக்கும்.

நியாயமான முறையில் நீங்கள் நடத்தப்படவில்லை என்றோ, முடிவு நியாயமற்றதென்றோ நீங்கள் கருதினால், மேல்முறையீடு ஒன்றை நீங்கள் தாக்கல் செய்யலாம். இரண்டாம் நிலைப் பாடசாலை அதிபருக்கு இந்த மேல்முறையீடு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 'பகுதி - D'

**கல்விரீதி தெரிவுப் பாடசாலை ஒன்றிற்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால்,** இந்தப் படிவத்தின் **'பகுதி - D'**-யிலுள்ள பெட்டியில் குறியிடுங்கள், மற்றும் தெரிவுப் பாடசாலையில் இடம் கிடைக்காமல் போகக்கூடும் என்பதால் **'பகுதி - B', 'C',** அல்லது **'பகுதி - E'**-யைப் பூர்த்தி செய்யுங்கள்.

## 'பகுதி - E'

**அரச பாடசாலை ஒன்றில் நீங்கள் இடம் நாடவில்லை என்றால், தயவு செய்து 'பகுதி - E'-யைப் பூர்த்தி செய்யுங்கள்.**

**'பகுதி - E'**-யைப் பூர்த்தி செய்வதால் உங்களுடைய பிள்ளை Year 7-இல் இடம் அமர்த்தப்படுவது சம்பந்தமாக NSW அரச பாடசாலைகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுவிடும்.



# ஆர்வ வெளிப்பாடு (Expression of Interest)

## NSW அரச பாடசாலை ஒன்றில் Year 7 - ல் சேர்தல்

## Placement in Year 7 in a NSW Government school.

**இப் படிவத்தினை தயவு செய்து ஆங்கிலத்தில் நிரப்புங்கள்.**

SRN ☐☐☐☐☐☐☐☐☐

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் (பெற்றோர்.'.கவனிப்பாளர் தயவு செய்து பூரணப்படுத்த வேண்டாம்) (Office use only)

## A – மாணவரைப் பற்றிய (A. Student information)

**குடும்பப் பெயர்**
**Family name** ________________

**இடப்பட்ட முதல் பெயர்**
**First given name** ________________

**Middle (இதர) பெயர்/பெயர்கள்**
**Middle (other) name/s** ________________

**பாலினம்**
**Gender**

☐ ஆண் Male ☐ பெண் Female

**பிறந்த திகதி**
**Date of birth** ☐☐/☐☐/☐☐☐☐
*நாள் மாதம் வருடம்*

**வசிப்பிட முகவரி** *(உதாரணமாக: 1 High Street, Sydney, NSW, 2000)* **(Residential address)**

________________

________________

**பெற்றோர்/பாதுகாவலரது பெயர்**
**Name of parent/carer** ________________

**தொலைபேசி இலக்கம்** *(கைப்பேசி)*
**Phone number** *(mobile)* ________________

**தொலைபேசி இலக்கம்** *(பணியிடம்)*
**Phone number** *(home)* ________________

**தொலைபேசி இலக்கம்** *(இல்லம்)*
**Phone number** *(work)* ________________

**மின்னஞ்சல் முகவரி**
**Email address** ________________

**மாணவர் தற்போது பயின்று வரும் ஆரம்பப் பள்ளி (Student's current primary school)**

________________

**உறுதிமொழி (Declaration)**

என்னுடைய அறிவிற்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரை, இந்த *'ஆர்வ வெளிப்பாடு'* (*Expression of Interest*) படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் துல்லியமானவை மற்றும் முழுமையானவை என உறுதி கூறுகிறேன். இவ் விண்ணப்பத்தில் உள்ள விடயங்கள் பொய்யானவை அல்லது தவறானவை என்று பின்னொரு சமயத்தில் தெரிய வந்தால், இவ்விண்ணப்பத்தை அடிப்படையாய்க் கொண்டு எடுக்கப்பட்ட எந்த முடிவும் திருப்பப்படலாம் என்பதை நான் அறிகிறேன். இந்த செயல்முறையைத் தொடர்ந்து கிடைக்கும் எந்த பாடசாலை இடமும் *'NSW அரசு பாடசாலை ஒன்றில் சேர்வதற்கான விண்ணப்பம்' (Application to enrol in a NSW government school)* ஒன்று கருத்தில் கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுவதைப் பொறுத்ததாகும் என்பதை நானறிகிறேன்.

**பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் (Signature of parent/carer)**

________________

**பெரிய எழுத்தில் பெயரை எழுதுக (Print name)**

________________

**திகதி**
**Date** ☐☐/☐☐/☐☐☐☐
*நாள் மாதம் வருடம்*

## B – உங்களது உள்ளூர் அரச பாடசாலையில் சேர்த்தல் (B. Placement at local government school)

**உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலை (Your local school)**

________________

உங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள உள்ளூர் அரச பாடசாலைக்கு உங்கள் பிள்ளை செல்ல வேண்டுமென நீங்கள் விரும்பினால் தயை செய்து கீழ் வரும் பகுதியில் கையொப்பமிடுங்கள்.

**பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் (Signature of parent/carer)**

________________

**திகதி**
**Date** ☐☐/☐☐/☐☐☐☐
*நாள் மாதம் வருடம்*

நீங்கள் மேலே கையொப்பமிட்டிருந்தாலும், உங்களுடைய பிள்ளை இந்தப் பாடசாலைக்கு மட்டுமே செல்லவேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும் இந்தப் படிவத்தினை நீங்கள் இப்போது பூர்த்தி செய்துவிடீர்கள்.

## C – மற்ற அரச பாடசாலைகளில் இட அமர்வுக்காகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்
## C. Consideration to be given to placement at other government schools

**உங்கள் பிள்ளை உள்ளூர் சாரா பாடசாலை ஒன்றில் படிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், மூன்று வரைக்குமான விருப்பத் தெரிவுகளை நீங்கள் மேற்கொள்ளலாம். நீங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்.**

- ஒரு **சிறப்புத்துவ அரச பாடசாலை**. சிறப்புத்துவப் பாடசாலை ஒன்றில் அமர்த்தப்படுவதற்காக உங்களுடைய பிள்ளை கருத்தில் கொள்ளப்படவேண்டுமென நீங்கள் விரும்பினால், ஆரம்பப் பாடசாலை அதிபருடைய உதவியை நாடுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள் என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள்.
- கூடுதலான கற்றல் மற்றும் ஆதரவுதவித் தேவைகள் உள்ள மாணவ-மாணவியர்களது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான **ஆதரவுதவி வகுப்புகள்** உள்ள ஒரு பாடசாலை. இது ஒரு ‘இட அமர்த்தல் குழு’வின் மூலமாகச் செய்யப்படும் என்பதைத் தயவு செய்து கவனியுங்கள். **ஆதரவுதவி வகுப்பு ஒன்றில் அமர்த்தப்படுவதற்காக உங்களுடைய பிள்ளை கருத்தில் கொள்ளப்படவேண்டுமென நீங்கள் விரும்பினால், ஆரம்பப் பாடசாலை அதிபருடைய உதவியை நீங்கள் நாடுவது நல்லது.**
- மற்ற **உள்ளூர் சாரா** அரச பாடசாலை. உள்ளூர் சாரா இட அமர்த்தலை / இட அமர்த்தல்களை நீங்கள் நாடுவதற்கான உங்களுடைய காரணங்களை இந்தப் பக்கத்தின் கீழ்ப் பகுதியில் (தேவைப்பட்டால் பக்கம் 7-இல்) குறிப்பிடுங்கள்.

கீழ் வரும் அரச பாடசாலைகளில் எனது பிள்ளைக்கு இடம் வேண்டுகிறேன்:

| | |
|---|---|
| பாடசாலை விருப்பத்தெரிவு 1<br>**Choice 1 school** | |
| பாடசாலை விருப்பத்தெரிவு 2<br>**Choice 2 school** | |
| பாடசாலை விருப்பத்தெரிவு 3<br>**Choice 3 school** | |

மேலே சொல்லப்பட்டுள்ள பாடசாலைகள் எதிலும் என் பிள்ளைக்கு இடம் கிடைக்கவில்லை என்றால், பகுதி B– யில் பட்டியலிடப்பட்டுள்ள ஒதுக்கப்பட்ட உள்ளூர் பாடசாலையில் என் பிள்ளை அமர்த்தப்படும் என்பதை நான் அறிவேன்.

**பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம (Signature of parent/carer)**

**திகதி**
**Date** ☐☐/☐☐/☐☐☐☐
*நாள் மாதம் வருடம்*

## ஆரம்பப் பாடசாலை அதிபரது பயன்பாட்டிற்கு மட்டும் (Primary school principal use only)

Primary school principals may wish to include comments to assist secondary school principals make placement decisions. These comments should refer to the reasons given by parents and carers.

**Signature of primary school principal**

**Date** ☐☐/☐☐/☐☐☐☐
*day month year*

**உள்ளூர் சாராத பாடசாலைகளில் இடம் வேண்டி விண்ணப்பித்தால் மட்டும் கீழே கேட்கப்பட்டுள்ள விபரங்களை நிரப்புங்கள். சிறப்புப் பாடசாலைகளுக்கோ, அல்லது ஆதரவுதவி வகுப்பு வேண்டியோ நீங்கள் விண்ணப்பித்தால் இப்பகுதியை நிரப்ப வேண்டிய தேவை உங்களுக்கில்லை.** தேவைப்பட்டால், உள்ளூர் சாராத பாடசாலைகளில் நீங்கள் இடம் வேண்டுவதற்கான காரணங்கள் குறித்த கூடுதல் தகவல்களை நீங்கள் தெரிவிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு பக்கங்கள் 2 மற்றும் 3–ஐப் பார்க்கவும்.

**விருப்பத்தெரிவு 1–ல் உள்ள பாடசாலையின் பெயர்**
**Name of Choice 1 school**

இந்தப் பாடசாலையில் இடம் நாடுவதற்கான உங்களது காரணங்களைச் சுருக்கமாக விளக்குங்கள் (பாடசாலையின் குறிப்பிட்ட சேர்க்கைத் தகுதித்தேவைகளைப் பார்க்கவும்).

## C (தொடர்ச்சி) C. (continued)

**விருப்பத்தெரிவு 2 –ல் உள்ள பாடசாலையின் பெயர்**
**Name of Choice 2 school**

இந்தப் பாடசாலையில் இடம் நாடுவதற்கான உங்களது காரணங்களைச் சுருக்கமாக விளக்குங்கள் (பாடசாலையின் குறிப்பிட்ட சேர்க்கைத் தகுதித்தேவைகளைப் பார்க்கவும்).

**விருப்பத்தெரிவு 3 –ல் உள்ள பாடசாலையின் பெயர்**
**Name of Choice 3 school**

இந்தப் பாடசாலையில் இடம் நாடுவதற்கான உங்களது காரணங்களைச் சுருக்கமாக விளக்குங்கள் (பாடசாலையின் குறிப்பிட்ட சேர்க்கைத் தகுதித்தேவைகளைப் பார்க்கவும்).

## D – கல்வி-ரீதி தெரிவுப் பாடசாலை (D. Academically selective school)

☐ கல்வி-ரீதி தெரிவுப் பாடசாலை ஒன்றில் இடம் வேண்டி நான் விண்ணப்பித்திருக்கிறேன். 'தெரிவு உயர்நிலைப் பாடசாலைகள் தேர்'வில் (Selective High Schools test) என் பிள்ளை அமரும்.
I have submitted an application for placement in an academically selective school. My child will be sitting for the Selective High Schools test.

*இந்தப் பாடசாலை அல்லது பாடசாலைகளில் உங்கள் பிள்ளைக்கு இடம் கிடைக்காமல் போகவும் கூடும் என்பதால், இப் படிவத்திலுள்ள பகுதி B பகுதி C அல்லது பகுதி E –யைப் பூர்த்தி செய்யுங்கள்.*

## E - இடம் தேவையில்லை (E. Placement not required)

எனது குழந்தை அடுத்த ஆண்டு NSW அரசுப் பாடசாலையில் இடம் கோர மாட்டான் என்று உறுதியளிக்கிறேன். ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல் திரட்டல் உள்ளடங்க, இந்த சம்ர்ப்பிப்பைப் பற்றிய தகவல்களை நான் வாசித்து விளங்கிக்கொண்டேன். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக்கு என் பிள்ளை செல்லும்.*
I confirm that my child will not be seeking placement at a NSW Government school next year. I have read and understood the information about this submission including the collection of personal information. My child will be attending the following school.*

**பெற்றோர்/பாதுகாவலரது கையொப்பம் (Signature of parent/carer)**

**திகதி**
**Date** __ __ / __ __ / __ __ __ __
*நாள் மாதம் வருடம்*

ஏேறு அரச பாடசாலை ஒன்றில் அடுத்த ஆண்டு என் பிள்ளைக்காக நான் இடம் வேண்ட மாட்டேன். எனது பிள்ளை கீழே சொல்லப்பட்டுள்ள பாடசாலைக்குச் செல்வார்.*

### தகவல் பாதுகாப்பு உறுதிமொழிக் கூற்று (Privacy Statement)

**ஆர்வத்தை வெளிப்படுத்துதல் - NSW அரசுப் பாடசாலையில் Year 7-இல்** சேருதல் என்ற தலைப்பில் இந்தப் படிவத்தில் வழங்கப்பட்ட தனிப்பட்ட தகவல்கள், NSW அரசுப் பாடசாலைகளில் Year 7 மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக சேகரிக்கப்படுகின்றன. NSW கல்வித் துறைக்கு (**துறை**) வழங்கப்படும் எந்தத் தகவலும் NSW தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு சட்டங்களுக்கு இணங்கப் பயன்படுத்தப்படும், வெளிப்படுத்தப்படும் மற்றும் சேமிக்கப்படும்.

பொது சுகாதாரம், கல்வி மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு மற்றும் பிற சட்டப்பூர்வ கடமைகள் மற்றும் செயல்பாடுகள் மற்றும் பொதுநலவாய - மாநில நிதி ஒப்பந்தங்களின் கீழ் தரவு சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு திணைக்களத்திற்கு சில தகவல்கள் தேவைப்படுகின்றன. இவை மாணவர்களின் முடிவுகளின் மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டை உள்ளடக்கியிருக்கலாம்.

NSW மாநிலம் மற்றும் பொதுநலவாய அரசாங்க முகவர் மற்றும் பிற அமைப்புகளுக்கு மேற்கண்ட நோக்கங்களுக்காகவும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது தேவைப்பாட்டிற்கும் தகவல் வெளியிடப்படலாம்.

பாதுகாப்பான மின்னணு தரவுத்தளத்தில் தகவல் சேமிக்கப்படும். உங்கள் பிள்ளையின் பாடசாலையைத் தொடர்புகொள்வதன் மூலம் நீங்கள் தகவலை அணுகலாம் அல்லது திருத்தலாம். சேகரிக்கப்பட்ட தகவல் அல்லது அது எவ்வாறு பயன்படுத்தப்பட்டது அல்லது வெளிப்படுத்தப்பட்டது என்பது குறித்து உங்களுக்கு கவலை அல்லது புகார் இருந்தால், நீங்கள் பாடசாலையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

கோரப்பட்ட சில தகவல்களை வழங்க வேண்டாம் என நீங்கள் தேர்வுசெய்தால், அது உங்கள் பிள்ளையின் சேர்க்கை, பாடசாலையின் ஆதாரம் அல்லது உங்கள் குழந்தையின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தீங்கு விளைவிக்கும்.

NSW அரசுப் பாடசாலை ஒன்றில் யில் உங்கள் குழந்தை சேர்க்கப்படும்போது சேகரிக்கப்படும் தகவல் மற்றும் உங்கள் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பை நாங்கள் எவ்வாறு பாதுகாக்கிறோம் என்பது பற்றிய கூடுதல் தகவல்கள் துறையின் இணையதளத்திலோ அல்லது உங்கள் பாடசாலையிலோ கிடைக்கும். திணைக்களத்தின் தனிப்பட்ட தகவல் சேகரிப்பு அறிவிப்பின் நகலை நீங்கள் பின்வரும் இணையதளத்தில் பெறலாம் https://education.nsw.gov.au/content/dam/main-education/about-us/rights-and-accountability/media/documents/privacy/collection-notice.pdf

தற்போது அரச ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு, தயவு செய்து இந்தப் படிவத்தை உங்கள் பிள்ளையின் ஆரம்பப் பாடசாலையில் கொடுக்கவும். அரச ஆரம்பப் பாடசாலைகளில் படிக்காத மாணவர்களுக்கு, உங்களுடைய முதல் விருப்பத்தெரிவு அரச இரண்டாம்நிலைப் பாடசாலைக்கு இந்தப் படிவத்தை அனுப்பவும். **உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனைத்து 'ஆர்வ வெளிப்பாடுக'ளும் திருப்பியனுப்பப்பட்டாக வேண்டும்.**



அனைத்து ஆபொரிஜினிப் பூர்வகுடிகளது பூர்வீக நிலங்களாகும் இவை என்பதை நாங்கள் ஏற்று இந்த நாட்டிற்கு எமது மரியாதையை நாங்கள் செலுத்துகிறோம்.

**Say hello**

@NSWDepartmentofEducation

@NSWEducation

@NSWEducation

education.nsw.gov.au

© 2023 NSW Department of Education

GPO Box 33, Sydney NSW 2001 Australia

Phone: 1300 679 332